## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் கை, கால் பாதிக்கப்பட்ட, காது கேளாத மாற்றுத் திறனாளிகளுடன் மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் மற்றும் 75%-க்கு மேல் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் குழந்தைகளின் தாய்மார்களுக்கு இலவச மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் – பயனாளிகள் பயன்பெற விதிக்கப்பட்ட வயது வரம்பான 18-45 வயது இருக்க வேண்டும் என்பதை இத்திட்டத்தின் கீழ் கூடுதல் பயனாளிகள் பயன்பெற ஏதுவாக பயனாளிகளின் வயது வரம்பினை 18-60 என உயர்த்தி – ஆணை – வெளியிடப்படுகிறது.


---

## மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை

அரசாணை (நிலை) எண்.12

நாள்: 27.05.2022
சுபகிருது, வைகாசி 13,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.20, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2.1)த் துறை, நாள் 13.03.2018.
2. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 04.05.2018.
3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3064/பணியமர்த்தல்/2021, நாள் 22.04.2022.

******

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்ட திட்டத்தின் கீழ் கூடுதல் மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வகையில் முதற்கட்டமாக மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் மற்றும் 75% க்கு மேல் பாதிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளின் தாய்மார்களும் வருமானம் ஈட்டும் வகையில் அவர்களது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு இத்திட்டத்தில் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி, செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி பயனாளிகளுடன், மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி மற்றும் 75%க்கு மேல் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளின் தாய்மார்களும் பயன்பெற தகுதியுடையவர்கள் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விதிக்கப்பட்ட நிபந்தனைகளுள் பயனாளிகள் 18-45 வயது வரம்பிற்குள் இருக்க வேண்டும் என்பது ஒன்றாகும்.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2018-2019 ஆம் நிதியாண்டு முதல் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுள் சுமார் 52 நலத்திட்டங்களை வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டுக்குள் செயல்படுத்திட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அதிகார பகிர்வு (Delegation of Powers) வழங்கப்பட்டுள்ளது. அவ்வாணையின் பத்தி 2(ii) (1)-ல் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் வழங்கும் திட்டமும் இடம் பெற்றுள்ளது.

3. இந்நிலையில், 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான மானிய கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் 21.04.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

"மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் புரிந்து வாழ்வில் முன்னேறுவதற்கு தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. இதற்கு தற்போது உள்ள வயது உச்சவரம்பினை 45-ல் இருந்து 60 ஆக நீட்டித்து ரூ.1.48/- கோடி செலவில் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 2100-க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயனடைவர்."

4. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் கடிதத்தில், தற்போது மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகள் பயன்பெற கீழ்கண்ட தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்:-

அ) தையல் பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்

ஆ) மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம் பெற வயது வரம்பு18 – 45-க்குள் இருத்தல் வேண்டும்

இ) பயனாளிகளின் பதிவுமூப்புஅடிப்படையில்வழங்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் 2141 தையல் இயந்திரங்கள் ரூ1,46,00,544/ மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன எனவும் மேலும் மாற்றுத்திறனாளிகள் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும், சுயமாக வாழ வழிவகை செய்திடவும் அதிக அளவில் மாற்றுத்திறனாளிகள் பயன்பெற அதிகபட்ச வயது வரம்பினை 45-லிருந்து 60-ஆக உயர்த்தி இத்திட்டத்தினை 2022–2023-ஆம் நிதியாண்டில் செயல்படுத்துவதற்கு அரசாணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

5. மாற்றுத்திறனாளின் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலினை செய்த அரசு அதனை ஏற்று, கை, கால் பாதிக்கப்பட்ட, காது கேளாத மாற்றுத்திறனாளிகளுடன் மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் மற்றும் 75%-க்கு மேல் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் குழந்தைகளின் தாய்மார்களுக்கு இலவச மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில் கூடுதல் பயனாளிகள் பயன் பெறுவதற்கு ஏதுவாக இத்திட்டத்தில் பயன்பெற ஏற்கெனவே விதிக்கப்பட்ட வயது வரம்பான 18-45 வயது இருக்க வேண்டும் என்பதை 18-60வயதாக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.26375/ நிதி(சந)/2022, நாள் 26.05.2022-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் ம.வ.மே.) அலுவலகம், சென்னை-9.
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை-9/35.

முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்.
(மாற்றுத்திறனாளிகள்நல இயக்குநர் வழியாக)

**நகல்:-**

நிதி (சந)த் துறை, சென்னை-9.
அரசு செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்